**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசுப் போக்குவரத்து கழக பேருந்துகளில் பயணம் செய்ய சலுகை மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகள் மற்றும் பணிக்கு செல்லும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு பேருந்தில் இலவச பயணச் சலுகை – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை– நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.19

நாள்: 30–03–2016
மன்மத, பங்குனி 17,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.66, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 31–10–2014.
2. அரசாணை(நிலை) எண்.26, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 31–03–2015.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2958/இவாததி/2015, நாள் 20.10.2015.

---

**ஆணை**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 75% கட்டணச் சலுகை, கல்வி பயிலும், பணிபுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பயணச் சலுகை மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு துணையாளருடன் வந்து செல்ல இலவச பயணச் சலுகை மேற்கொண்டவகையில், 2013–2014 ஆம் நிதியாண்டிற்கான அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் ரூ.15.00 கோடி மட்டும் 2014–15 ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 75% கட்டணச் சலுகை, கல்வி பயிலும், பணிபுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பயணச் சலுகை மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு துணையாளருடன் வந்து செல்ல இலவச பயணச் சலுகை மேற்கொண்டவகையில், 2013–2014 ஆம் நிதியாண்டில் அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் ரூ.5.00 கோடி மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2012–13 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட பேருந்து பயணச் சலுகைக்கான நிலுவை தொகை ரூ.39,71,816/–ம், 2013–14 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட 100% பயணச் சலுகை, 75% பயணச் சலுகை மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு வரும்

குழந்தைகள் மற்றும் துணையாளருக்கானக் கட்டணம் ரூ.30,70,68,743/—ம், 2014—15 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட 100% பயணச் சலுகை, 75% பயணச் சலுகை மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு வரும் குழந்தைகள் மற்றும் துணையாளருக்கான கட்டணம் ரூ.30,78,65,222/—ம் ஆக மொத்தம் ரூ.61,89,05,781/— நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. 2012 ஆம் ஆண்டின் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அரசு போக்குவரத்துக் கழகங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.60,02,47,591/— என கருவூல கணக்கு இயக்குநரால் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், அரசு போக்குவரத்துக் கழகங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.52,97,45,114/— என போக்குவரத்து துறையால் கணக்கிடப்பட்டுள்ளது. நிலுவைத் தொகையை சரியாக கணக்கிடப்படும்வரை அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% தொகையை மாற்றுத் திறனாளிகளுக்கான போக்குவரத்து சலுகை திட்டத்தின் கீழ் அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் பிடித்தம் செய்திட கருதப்படுகிறது.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2015—2016 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 75% கட்டணச் சலுகை, கல்வி பயிலும், பணிபுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பயணச் சலுகை மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு துணையாளருடன் வந்து செல்ல இலவச பயணச் சலுகை மேற்கொண்டவகையில், 2012—2013, 2013—2014 மற்றும் 2014—2015 ஆம் நிதியாண்டிற்கான அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.61,89,05,781/— (ரூபாய் அறுபத்தொன்று கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்று மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.61,89,05,781/—ல் போக்குவரத்து கழகங்களால் புது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்—2012ல் (NHIS-2012)அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையில் ரூ.30,01,23,796/— (ரூபாய் முப்பது கோடியே ஒரு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) கீழ்க்கண்ட போக்குவரத்து கழகங்களில் நிலுவைத் தொகையில் சரிக்கட்டிய பின்னர் அத் தொகையை

"0075 00—பல்வகை பொதுவான பணிகள்—800 ஏனைய வரவுகள்—BO புதிய உடல்நல காப்புறுதித் திட்டம் குறித்து பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படிக்கான வாரியங்களைச் சேர்ந்த பணியாளர்கள் சந்தாத் தொகை"

(து.தொ.கு 0075 00 800 BO 0004)

என்ற கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

| வ.எண். | போக்குவரத்து கழகம் | தொகை |
|---|---|---|
| 1. | மாநகர போக்குவரத்து கழகம், சென்னை | ரூ.2,57,83,517/— |
| 2. | அரசு விரைவு போக்குவரத்து கழகம், சென்னை. | ரூ.2,12,47,985/— |
| 3. | அரசு போக்குவரத்து கழகம், சேலம். | ரூ.5,05,53,103/— |
| 4. | அரசு போக்குவரத்து கழகம், கோயம்புத்தூர். | ரூ.6,95,26,082/— |
| 5. | அரசு போக்குவரத்து கழகம், கும்பகோணம். | ரூ.2,92,80,672/— |
| 6. | அரசு போக்குவரத்து கழகம், மதுரை. | ரூ.5,84,29,020/— |
| 7. | அரசு போக்குவரத்து கழகம், திருநெல்வேலி. | ரூ.4,53,03,417/— |
| | மொத்தம். | ரூ.30,01,23,796/— |

7. எஞ்சிய தொகையான ரூ.31,87,81,985/– (ரூபாய் முப்பத்தொரு கோடியே எண்பத்தேழு இலட்சத்து எண்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தைந்து மட்டும்) இலவச பயணச் சலுகை திட்டத்தின் கீழ் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

8. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது BG– மாற்றுத் திறனாளிகளுக்கு பயணச் சலுகை–42–பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்."

(து.தொ.கு. 2235–02–101–BG-4206)

9. மேலே பத்தி–7ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று உரிய ஒப்புகையின் பேரில் சம்பந்தப்பட்ட போக்குவரத்து கழகங்களுக்கு வழங்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். மேலும் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்படும் தொகை அரசாணை(நிலை) எண்.233, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 03–12–2007ல், ஆணையிடப்பட்ட நெறிமுறைகளின்படி கணக்கிடப்பட்டுள்ளது என்ற சான்றிதழை (Specific certificate) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர்களிடமிருந்து தவறாமல் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்கும்படியும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. 2015–16 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.15.00 கோடிக்கு மேலாக 2015–16க்கான துணை மதிப்பீட்டில் ரூ.46,89.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 22174/நிதி(சந)/2016, நாள் 29.03.2016ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர்கள்.(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**<u>நகல்:-</u>**
நிதி(சந/சம்பளங்கள்)த் துறை, சென்னை–9.
போக்குவரத்துத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.